883

மாக்மில்லன் தமிழ் கதாவாசக புஸ்தகம்

8-AUG 1929
MADRAS

முதலாவது

கதா வாசக புஸ்தகம்

(இரண்டாம் வகுப்பிற்கு)

TB
031,3(2)
N29

முதலாவது

கதா வாசக புஸ்தகம்

(இரண்டாவது வகுப்பிற்கு)

1366
494 84
THE REGISTRAR OF BOOKS
8 AUG 1929
MADRAS

இது
பச்சையப்பன் கலாசாலையில் தலைமைத் தமிழ் பண்டிதராயிருந்த
காலஞ்சென்ற

தி. செல்வகேசவராய முதலியார், எம்.ஏ.,

அவர்களால் இயற்றப்பட்டது.

புதிய பதிப்பு

மாக்மில்லன் அண்டு கம்பெனி, லிமிட்டெட்,

மதறாஸ், பம்பாய், கல்கத்தா, லண்டன்

1929

ரிஜிஸ்தர் செய்தது]

[விலை அணா $2\frac{1}{2}$

TB
031,3(2)
N29
85046

முகவுரை

இந்த வகையைச்சேர்ந்த வாசக புஸ்தகங்களிலுள்ள பாடங்கள் பெரும்பாலும் கதைகளாக இருப்பதால், இப்புஸ்தகங்கள் கதா வாசக புஸ்தகங்கள் என்று பெயரிடப்பெற்றன. சிறுவர்களுக்கு வாசகத்தில் பிரியமும் ஊக்கமும் உண்டாகும்பொருட்டே இவை எழுதப்பெற்றன.

ஒவ்வொரு கதையும் ஒவ்வொரு நீதி மார்க்கத்தைப் போதிப்பதால், இந்தப் புஸ்தகங்களைச் சன்மார்க்க போதக புஸ்தகங்கள் என்றும் சொல்லலாம். இவற்றின் முதலிலுள்ள அட்டவணையில் கதைகளுக்குப் பொருத்தமான நீதிகள் எழுதப்பெற்றிருக்கின்றன. உண்மை - தெய்வபக்தி - வணக்கம் - பெற்றோரிடத்தில் அன்பு - மரியாதை - விவேகம் - ஜீவகாருண்யம் ஆகிய இவற்றால் வரும் மேன்மையும், உழைப்பினாலும் விடா முயற்சியாலும் உண்டாகும் நன்மைகளும் கதை ரூபமாக விளக்கப்படுகின்றன. பொய் பேசுதல்-களவு-மோசம் - கோபம் - வீண்பெருமை - சோம்பல் - அவசரம் முதலியவற்றால் வரும் கெடுதிகளும் காட்டப்படுகின்றன. சிறுவர்களுக்கு வெறும் நீதிகளைப் போதிப்பதைக் காட்டிலும் அவற்றைச் சிறு கதைகள் ரூபமாகக் கற்பித்தலே சிறந்த போதனாமுறை என்பது எல்லாரும் அறிந்த விஷயமே.

இந்தக் கதைகளில் அநேகம் யாவருக்கும் தெரிந்தவை. ஈஸாப் என்பர் இயற்றிய கட்டுக்கதைகளிலிருந்தும், பஞ்ச தந்திரத்திலிருந்தும் எடுத்தவை பல. சில கதைகள் மஹாபாரதத்திலிருந்து எடுத்தவை. நான்காவது, ஐந்தாவது, ஆறாவது, ஏழாவது கதா வாசக புஸ்தகங்களில், இந்துதேச சரித்திரம், இங்கிலாந்தின் சரித்திரம் இவற்றிலுள்ள சில கதைகளும், இந்துக்களிலும் மகம்மதியர்களிலும் கீர்த்திமான்களாக இருந்த சிலருடைய சரித்திரமும், சென்னை வாசிகளில் அநேகம் பிரமுகர்களுடைய வரலாறும் அடங்கியிருக்கின்றன.

பலவகையான உருவப்படங்கள் இந்த வாசக புஸ்தகங்களில் அங்கங்கே அமைந்துள்ளன. இவற்றுள் அநேகம் இந்தப்புஸ்தகங்களுக்காகவே செய்யப்பட்டவை. இப்புஸ்தகங்களைத் தனியாகவும் வேறு புஸ்தகங்களோடு கலந்தும் உபயோகிக்கலாம்.

பொருள் அட்டவணை

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 8-AUG 1929 MADRAS

பாடம்.		பக்கம்.
1.	என் தகப்பனார்.—My Father	7
2.	என் தாயார்.—My Mother	8
3.	கடவுள்.—God	10
4.	சோம்பேறிப் பையன்.—'Work Hard' or The Idle Boy	12
5.	ஒன்றையும் ஒளிக்காமல் உள்ளதைச் சொல்—Confess your Faults	16
6.	*Verse.* பெற்றோர் வளர்த்த அருமை.—*The Kindness of My Parents* ...	18
7.	தலையும் வாலும்.—Follow your leader or The Head and The Tail	19
8.	இரண்டு நண்டுகள்.—Do as you say or The Crab and its Mother	21
9.	*Verse.* நிலாவை அழைத்தல்.—*The Moon*	22
10.	பள்ளிக்கூடம் போதல்.—Going to School ...	23
11.	எறும்பும் வெட்டுக்கிளியும்.—Do not Waste Time or The Ant and the Grasshopper	25
12.	*Verse.*–பராக்குக் காட்டல்.—*Amusement*	27
13.	புத்தியில்லாத சுண்டெலி.–Obey your Parents or The Foolish Mouse	27
14.	*Verse.* சாய்ந்தாடல்.—*A Child's first movements*	29
15.	பேராசை உள்ள நாய்.—Do not be greedy or The Dog and the Shadow	30
16.	யானையும் குழந்தையும்.—Be kind to all or The Elephant and The Child	31
17.	*Verse.* தாலாட்டு.—*A Lullaby Song*	33
18.	காக்கையை வஞ்சித்த நரி.—Do not be vain or **The Fox and the Crow**...	34

பாடம். பக்கம்.

19. மதிகெட்ட ஆட்டுக்குட்டி.-Do as your Mother tells you or The Silly Lamb 36

20. *Verse.* கை வீசுதல்.—*Arm-swinging* 39

21. புறாக்களும் வேடனும்.—Trust in God or The Fowler and the Doves 39

22. *Verse.* சிற்றுண்டி.—*Sweets* 41

23. நரியும் மத்தளமும்.—Be content with what you have or The Fox and the Drum ... 42

24. கரடியும் இரண்டு சிறுவர்களும்.-Do not trust a Boaster or The Bear and the Two Boys. 43

25. நரியும் கொக்கும்.-Do as you would be done by or The Fox and The Crane ... 45

26. *Verse.* உனக்கு என்ன வேண்டும்? *What do you want?* 47

27. மயிலும் வயிரமும்.-The Wise know the worth of a thing or The Peacock and The Jewel. 48

28. *Verse.* தாயின் அருமை.—*What did mother give you.* 50

29. கிழக்கிளியும் கவனமற்ற சிறுவனும்.-Be kind to your Pets or The Boy and The Parrot. 50

30. *Verse.* மழையை அழைத்தல்.-*Come rain, come!* 52

31. பிள்ளைகளும் தவளைகளும்.—Do not hurt any animal or The Boys and The Frogs ... 53

32. *Verse.* நிலாச்சோறு சமைத்தல்.—*Rice* 55

33. பிராமணனும் கீரிப்பிள்ளையும்.—Do nothing in haste or The Brahman and the Mungoose 56

34. *Verse.* அத்தை மகனை ஏசல்.-*Our cousin* 58

செய்யுட்பாடம்

ஆத்திசூடி 60

உலகநீதி 61

வெற்றிவேற்கை 62

கற்பிக்கும் முறை

1. இந்த வாசக புஸ்தகத்தில் ஒவ்வொரு பாடத்திலும், ஒவ்வொரு நல்ல படம் இருக்கிறது. சில பாடங்களில் இரண்டு படங்களும் உண்டு. புத்தகங்களை அழகுபடுத்திச் சிறுவர்களுடைய மனத்தை வசீகரித்து வாசகம் படிப்பதில் அவர்களுக்கு ஊக்கம் அளிப்பதே இப்படங்களைப் பதிப்பித்ததின் உத்தேசம். உபாத்தியாயர் பிள்ளைகளுக்குப் பாடங்களைச் சுலபமாகக் கற்பிப்பதற்கும் இப்படங்கள் உதவியாக இருக்கும்.

2. உபாத்தியாயர் ஒரு பாடத்தை ஆரம்பிக்கும் முன்னே, அதில் உள்ள படத்தைப் பார்க்கும்படி பிள்ளைகளுக்குச் சொல்லவேண்டும். படம் எதைப்பற்றினது என்று முதலில் பிள்ளைகளைக் கேட்டுவிட்டு உபாத்தியாயர் படத்தில் உள்ள ஒவ்வொரு பொருளையும் காட்டிப் படத்தின் விவரங்களையெல்லாம் அவர்களுக்கு விளக்கமாகச் சொல்லவேண்டும்.

3. பிள்ளைகள் ஒரு பாடத்தில் உள்ள படத்தைப்பற்றிய விஷயங்களை யெல்லாம் அறிந்தபிறகு, உபாத்தியாயர் அந்தப் பாடத்தில் உள்ள கதையைக் கூடுமானவரையில் விநோதமாகத் தம்முடைய வார்த்தையாலேயே பிள்ளைகளுக்குச் சொல்லவேண்டும். சொல்வதை நன்றாகச் சொன்னால் பிள்ளைகள் மிகவும் பிரியமாகக் கேட்பார்கள்.

4. உபாத்தியாயர் அவ்விதமாகக் கதையைச் சொல்லி முடித்த பிறகு, தாம் சொல்லியவிதமாகவே பிள்ளைகளையும் சொல்லச் சொல்லவேண்டும். ஒரு சிறுவன் கொஞ்சதூரம் கதையைச் சொன்னபிறகு, மற்றொருவனைத் தொடர்ச்சியாகச் சொல்லச் சொல்லி அப்படியே கதை முடிகிறவரையில் மற்றவர்களையும் சிறிது சிறிதாகச் சொல்லும்படி செய்யலாம்.

5. பிள்ளைகள் படத்தின் விவரத்தை நன்றாக அறிந்துகொண்டு கதையைச் சொன்னபிறகு, உபாத்தியாயர் அவசரப்படாமல் அந்தப் பாடத்தைத் தெளிவாக ஒவ்வொரு வாக்கியமாக வாசித்துக் காட்டி அவர்களையும் அப்படியே வாசிக்கச் சொல்லவேண்டும்.

6. கடைசியில், ஒவ்வொரு பையனும் ஒவ்வொரு வாக்கியமாகக் கெட்டியாக வாசித்துக் கதையை முடிக்கவேண்டும். பாடத்தைப் பற்றி ஒன்றும் தெரிந்துகொள்ளாமல் வாசிப்பதைவிட, இவ்விதமாக எல்லா விஷயங்களையும் முதலில் அறிந்துகொண்டு பிறகு பாடத்தை வாசிப்பது பிள்ளைகளுக்கு மிகவும் சுலபமாக இருக்கும்

7. முதலாவது இரண்டாவதான கீழ் வகுப்புகளிலும் மூன்ருவது வகுப்பிலும், பிள்ளைகள் ஒரு கதையைப் படித்து அதன் விஷயங்களை நன்ருக அறிந்தபிறகு, கதையை ஒரு நாடகம்போல் நடிக்கச்செய்வது பாடத்திற் பிள்ளைகளுக்கு அதிக ஊக்கத்தை உண்டாக்கும். கதையின் ஒவ்வொரு பாகத்தை ஒவ்வொரு சிறுவன் நடிக்கலாம்.

8. உதாரணமாக, சோம்பேறிப் பையன்களைப்பற்றிய 4-வது கதையைக் காட்டுகிருேம். வகுப்பில் ஒரு சிறுவனைச் சோம்பேறிப் பையனுக ஏற்படுத்திக்கொள்ளலாம். வகுப்பின் ஒரு பாகத்தை அவன் வீடாகவும், ஒரு பலகையை அவன் படுத்திருக்கிற கட்டிலாகவும் வைத்துக்கொள்ளலாம். மற்ருெரு பிள்ளை சோம்பேறிப் பையனுடைய தாயாக ஏற்பட்டு, தூங்குகிறவனை எழுப்ப, அவன் விழித்துக்கொண்ட பிறகு, அவனைப் பாடசாலைக்குப் போகச்சொல்லலாம். பள்ளிக்கூடத்தையே வயலாகப் பாவித்து, அதில் சோம்பேறிப் பையன் நடந்துபோவதாக நடிக்கலாம். அப்போது வேருெரு பிள்ளை, "கா கா" என்று கூவி, காக்கையாக நடிக்கலாம். இரண்டு மூன்று பிள்ளைகள் தேனீக்களைப்போல ஊங்காரம் செய்துகொண்டிருக்கலாம். வேறு சில பிள்ளைகள் எறும்புகளாக நடிக்கலாம். இவர்கள் இங்கும் அங்கும் ஒவ்வொரு கூட்டமாக இருக்கவேண்டும். அந்த அந்த ஜந்து அந்த அந்தப் பாடத்தில் என்ன என்ன சொல்லுகிறதாக இருக்கிறதோ, அந்த அந்த விதமாகவே அந்த அந்தப் பிள்ளைகள் சொல்லவேண்டும். இவ்விதமாக அந்தப் பாடம் முழுவதையும் ஒரு சிறு நாடகமாகப் பிள்ளைகளைக்கொண்டு நடித்துக்காட்டலாம்.

ஒரு பாடத்தை ஒருமுறை நடித்தானபிறகு, அந்தப் பாடத்தையே வெவ்வேறு பிள்ளைகள் வெவ்வேறு பாகங்களை நடிக்கும்படி பலமுறை செய்து காட்டலாம். இதனுல் ஒவ்வொரு பிள்ளையும் பாடத்திலுள்ள பல பாகங்களையும் நடிக்க இடம் உண்டாகும்.

9. இங்ஙனம் ஒரு பாடத்தைக் கற்பிப்பதில் அனுசரிக்கும் முறைகளாவன :—

1 படத்தை விளக்குவது : 2. கதையைச் சொல்லுவது : 3. பிள்ளைகளைக் கதையைச் சொல்லச்செய்வது : 4. பாடத்தை வாசிப்பது : 5. பிள்ளைகளைப் பாடத்தை வாசிக்கச் சொல்லுவது : 6. கதையை நாடகமாக நடிப்பித்தல்.

முதலாவது

கதா வாசக புஸ்தகம்

1. என் தகப்பனார்

1. நான் சாப்பிடும்பொருட்டு நாளெல்லாம் வேலைசெய்து பணம் சம்பாதிக்கிறவர் எவர்?

என் தகப்பனார்.

2. நான் பிறந்தது முதல் என்னிடம் அன்புபாராட்டி எனக்கு அன்னவஸ்திரம் கொடுக்கிறவர் எவர்?

என் தகப்பனார்.

3. செவ்வையாகப் பேசவும் ஒழுங்காக நடக்கவும் எனக்குக் கற்றுக்கொடுக்கிறவர் எவர்?

என் தகப்பனார்.

4. பாடசாலைக்கு என்னை அனுப்பி, எனக்கு வேண்டிய புஸ்தகங்களை வாங்கிக் கொடுக்கிற வர் எவர்?

என் தகப்பனார்.

5. உலகத்தில் என்னிடம் அதிக ஆசை உள்ளவர் எவர்?

என் தகப்பனார்.

6. எவரிடத்தில் நான் அடக்கமாகவும் மரி யாதையாகவும் வணங்கி நடக்கவேண்டும்?

என் தகப்பனாரிடத்தில்.

---

2. என் தாயார்

1. மற்றவர்களைவிட என்னிடம் அதிக அன் பாக இருப்பவர் எவர்?

என் தாயார்.

2. நான் குழந்தையாக இருந்தபோது எனக்குப் பால் ஊட்டினவர் எவர்?

என் தாயார்.

3. நான் குழந்தைப் பருவத்தில் தவழும் போது எனக்கு நடக்கச் சொல்லிக்கொடுத்தவர் எவர்?

என் தாயார்.

4. நான் கீழே விழுந்து அழும்போது ஓடி வந்து, என்னை எடுத்து, அழாதே அழாதே என்று சொன்னவர் எவர்?

என் தாயார்.

5. நன்ருகப் பேசுவதற்கு முன்னே, அம்மா அப்பா என்று சொல்லவும், மழலைச் சொற்களைப் பேசவும் எனக்குக் கற்பித்தவர் எவர்?

என் தாயார்.

6. இரவில் என்னைப் படுக்கவைத்து விசிறியால் விசிறித் தூங்கப்பண்ணினவர் எவர்?

என் தாயார்.

7. என்னோடு விளையாடி, எனக்கு முத்தம் கொடுத்து, "என் கண்ணே! கண்மணியே!" என்று என்னை ஆசையுடன் அழைத்தவர் எவர்? என் தாயார்.

8. நான் ஆசை பாராட்டி மரியாதையுடன் வணங்கி ஆதரிக்க வேண்டியது எவரை? என் தாயாரை.

---

3. கடவுள்

1. இராமன் என்பவன் ஒரு சிறு பையன் தான். ஆனாலும் அவன் நல்ல கெட்டிக்காரன். எட்டுவயது வரையில் அவன் தகப்பனார் அவனுக்கு வீட்டிலேயே பாடம் சொல்லிக்கொடுத்தார். அவர் மிகுந்த புத்திசாலி; இராமனுக்கு அவர் அநேக விஷயங்களைக் கற்பித்தார்.

2. எட்டாவது வயதில் இராமனை அவர் பள்ளிக்கூடத்துக்கு அழைத்துக்கொண்டு போனார். அப்போது இராமனைப் பார்த்து உபாத்தியாயர், "உனக்கு என்ன தெரியும்?" என்று கேட்டார். அதற்கு இராமன், "ஐயா, எனக்கு எழுதவும் படிக்கவும் தெரியும்" என்று சொன்னான். "கணக்குப் போடத் தெரியுமா" என்று உபாத்தியாயர் மறுபடி கேட்டார். இராமன், "தெரியும்" என்று சொன்னான்.

3. இராமனுடைய தகப்பனாரைப் பார்த்து உபாத்தியாயர், "உங்கள் பிள்ளைக்குப் படிக்கவும் எழுதவும் கணக்குப் போடவும் சொல்லிக்

கொடுத்து இருக்கிறீர்கள். கடவுளைப்பற்றி ஏதாவது சொல்லிக்கொடுத்து இருக்கிறீர்களா?'' என்று கேட்டார். அதற்கு இராமன் தகப்பனார், "அவனையே கேளுங்கள்'' என்று சொன்னார்.

4. அதன்மேல் இராமனை நோக்கி உபாத்தியாயர், "பையா, கடவுளைப்பற்றி உன்னை மூன்று கேள்விகள் கேட்கிறேன்.

1. கடவுள் இருக்கிற இடம் உனக்குத் தெரியுமா?

2. கடவுளுக்கு என்ன தெரியும்?

3. அவரால் என்ன செய்ய முடியும்?

இவற்றையெல்லாம் உன் பிதா உனக்குச் சொல்லிக்கொடுத்தாரா?'' என்று கேட்டார்.

5. அதற்கு இராமன், "ஐயா, சொல்லுகிறேன். ஆனால் நான் சொல்லுவதற்கு முன்னே நீங்கள் எனக்கு மூன்று விஷயங்கள் சொல்ல வேண்டும்.

முதலாவது, கடவுள் இல்லாத இடம் எது?

இரண்டாவது, கடவுளுக்குத் தெரியாதது என்ன?

மூன்றாவது, அவரால் செய்ய முடியாத காரியம் என்ன?" என்று வணக்கமாகக் கேட்டான்.

6. இவ்வாறு கேட்கவும், உபாத்தியாயருக்கு அதிக ஆனந்தம் உண்டாயிற்று. அவர், இராமன் தகப்பனாரைப் பார்த்து, "ஐயா, உங்கள் பிள்ளைக்கு நன்றாகக் கல்வி கற்பித்திருக்கிறீர்கள். கடவுளைப்பற்றி இதைவிட அதிகமாக என்னால் ஒன்றும் கற்பிக்க முடியாது. மற்ற விஷயங்களைப் பற்றி எனக்குத் தெரிந்தவற்றை எல்லாம் போதிக்கிறேன்" என்று சொன்னார்.

---

4. சோம்பேறிப் பையன்

1. அரங்கன் என்று ஒரு பையன் இருந்தான். அவன் சோம்பேறி. பாடங்களை அவன் படிப்பதில்லை. எந்நேரமும் விளையாடுவதே அவனுடைய வேலை. அவன் தகப்பனார் பணக்காரர். அவருக்கு ஒரு பெரிய வீடு இருந்தது. அரங்கன் படிப்பதற்காக அவர் அந்த வீட்டில் ஒரு சிறிய அறையை விட்டிருந்தார்.

2. ஒருநாள் காலையில் அவன் படுக்கையை விட்டு நேரம் பொறுத்து எழுந்து தன் அறைக் குப்போனான். புஸ்தகத்தைத் திறந்துகூடப் பார்க்கவில்லை. புஸ்தகங்கள் ஒரு பக்கமாக விழுந்துகிடந்தன. கொஞ்ச நேரம்வரையில் அவன் ஒன்றுமே செய்யவில்லை. பிறகு அவனை அவன் தாயார் கூப்பிட்டு, "ஏன் சும்மா இருக் கிறாய்? பள்ளிக்கூடத்துக்குப் போகவில்லையா?" என்று கேட்டார்.

3. அரங்கன், "இதோ போகிறேன்" என்று புஸ்தகங்களை எடுத்துக்கொண்டு புறப்பட்டான். ஆனால் பள்ளிக்கூடத்துக்குப் போகாமல் அவன் வழியில் ஒரு தோட்டத்துக்குப் போனான். அங்கே பட்சிகள் பாடிக்கொண்டு இருந்தன. அரங்கனுக்கு விளையாடலாம் என் கிற நினைவு வந்தது. பிள்ளைகள் எல்லாரும் பள்ளிக்கூடத்துக்குப் போய்விட்டதனால் அவ னோடு விளையாட அங்கே ஒருவரும் இல்லை.

4. அங்கே இருந்த சுள்ளிகளை ஒரு காக்கை பொறுக்கிக் கொண்டிருந்தது. அரங்கன் அதைப் பார்த்து, "காக்கா, காக்கா, என்னோடு விளையாட வருகிறாயா?" என்று கேட்டான். "இல்லை, இல்லை! நான் கூடு கட்டிக்கொண்டு இருக்கிறேன். மழைநாள் வருவதற்குள் கூடு கட்டி முடிக்கவேண்டும். நான் சோம்பலாக விளையாடிக்கொண்டிருக்க முடியாது" என்று சொல்லிவிட்டு, காக்கை பறந்துபோயிற்று.

5. பிறகு, புஷ்பங்கள்தோறும் பறந்துகொண் டிருந்த சில தேனீக்களை அரங்கன் பார்த்தான்.



பார்த்து, "தேனீக்களே, விளையாடலாம் வாருங்கள்" என்று அவைகளை அழைத்தான். தேனீக்கள், "முடியாது, முடியாது! நாங்கள் புஷ்பங்களில் இருந்து தேன் எடுக்கிறோம். புஷ்பங்கள் சீக்கிரத்தில் உலர்ந்துபோகும். உலர்ந்து

போனால் தேன் கிடைக்காது. எங்களோடு பேச வேண்டாம். எங்களுக்கு அதிக வேலை இருக்கிறது; பேசக்கூட நேரம் இல்லை" என்றன.

6. அதற்குப்பின், அரங்கன் வரிசை வரிசையாகப் போகிற சில எறும்புகளைக் கண்டான். ஒவ்வொரு எறும்பும் ஒவ்வொரு அரிசியை இழுத்துக்கொண்டு போயிற்று. அவன், "ஓ எறும்புகளே! ஒரு நிமிஷநேரம் என்னோடு விளையாடுங்கள். உங்கள் வேலையை அப்பால் செய்யலாமே" என்று சொன்னான்.

7. அதற்கு எறும்புகள், "மாட்டோம், மாட்டோம்! இரைதேட இதுதான் எங்களுக்கு நல்ல சமயம். கொஞ்சநாள் ஆனால் ஒரு தானியமும் கிடைக்காது. மழைநாளுக்கு வேண்டிய இரையை நாங்கள் இப்பொழுது சேர்க்கிறோம். எங்களுக்கு நிற்க நேரம் இல்லை. உன்னோடு பேசிக்கொண்டிருந்ததில் கொஞ்ச நேரம் வீணாகப் போய்விட்டது" என்று சொல்லி, பரபரவென்று போய்விட்டன.

8. இவற்றையெல்லாம் கேட்ட அரங்கன், "இதென்ன! இந்த ஊரில் என்னைத் தவிர வேறே சோம்பேறி இல்லையா! பட்சிகளும் எறும்புகளும் தேனீக்களும்கூட விளையாட நேரம் இல்லாமல் வேலை செய்கின்றனவே. நான்மாத்திரம் ஏன் சோம்பேறியாக இருக்க வேண்டும்?" என்று யோசனை செய்தான். உடனே வேகமாக ஓடி, உபாத்தியாயர் வருகிற வேளைக்குமுன் பள்ளிக்கூடம் போய்ச் சேர்ந்து விட்டான்.

5. ஒன்றையும் ஒளிக்காமல் உள்ளதைச் சொல்

1. வெகுகாலத்துக்குமுன் ஓர் ஊரில் செல்வப்பிள்ளை என்ற உபாத்தியாயர் ஒருவர் இருந்தார். அவருக்கு இராசு என்று ஒரு மகனும் கமலம் என்று ஒரு மகளும் உண்டு. ஒருநாள் அவர்கள் வீட்டின் முன்பக்கத்து அறையில் விளையாடிக்கொண்டு இருந்தார்கள். அங்கே ஒரு நிலைக்கண்ணாடி இருந்தது. அதை அவர்கள் பார்க்கவில்லை. விளையாடும்போது இராசு கமலத்தைத் தள்ளிவிட்டான். அப்போது கமலம் கண்ணாடியின்மேல் விழுந்தாள். கண்ணாடி கீழே விழுந்து உடைந்தது.

2. கமலம்: அண்ணா, என்னை ஏன் பிடித்துத்தள்ளினாய்? இதோ பார்! கண்ணாடி உடைந்துவிட்டதே.

3 இராசு: உன்னைத் தள்ளவேண்டும் என்று நான் நினைக்கவில்லை. இப்பொழுது என்ன பண்ணலாம்? அது உன் தப்புதான்.

4. கமலம்: இரண்டுபேரும் விளையாடினோம். என்மேல்தான் தப்பு என்று சொல்லலாமா? அது இருக்கட்டும்: இதற்கு என்ன செய்கிறது?

5. இராசு: அப்பா பார்த்தால் இரண்டு பேரையும் அடிப்பார். அதை எங்கேயாவது ஒளித்து வைத்துவிடலாம்.

6. கமலம்: வேண்டாம், வேண்டாம். எப்போதாவது அது தெரிந்துவிடும். ஆகையால், தெரியாமல் செய்துவிட்டோம் என்று நாம்

அவரிடத்தில் உண்மையை இப்பொழுதே சொல்லலாம். உள்ளதைச் சொன்னால் அவருக்குக் கோபம் வராது.

7. இராசு: அப்பா அடிப்பாரே என்று எனக்குப் பயமாக இருக்கிறது. அம்மா இடத்தில் முன்னடியே சொன்னல் நல்லது. கோபித்துக் கொள்ளவேண்டாம் என்று அவருக்கு அம்மா சொல்லுவாள்.

8. இப்படிப் பேசிக்கொண்டிருந்த பொழுது அவர்கள் தாயார் ஏதோ காரியமாக வந்து அந்த அறையில் இருந்த ஒரு நாற்காலியில் உட்காரவே, இராசுவும் கமலமும் தாயாரிடம் போய் ஒன்றும் சொல்லாமல் குனிந்துகொண்டு நின்றார்கள்.

9. என்ன நடந்ததோ தெரியவில்லையே என்று எண்ணி, "ஏன் பேசாமல் இப்படி நிற்

கிறீர்கள்? ஏதாவது தப்பு செய்தீர்களா?'' என்று தாயார் குழந்தைகளைக் கேட்கவே, கமலம் தேம்பித் தேம்பி அழுதாள். இராசு கண்ணைத் துடைத்துக்கொண்டு பக்கத்தில் நின்றான்.

10. மறுபடியும் தாயார், "குழந்தைகளே, ஏன் அழுகிறீர்கள்? உங்களை யாராவது அடித்தார்களா? என்ன நடந்தது சொல்லுங்கள்!'' என்று கேட்டு, "அழவேண்டாம்'' என்று சொன்னார்.

11. கமலம்: அம்மா, நாங்கள் விளையாடிக் கொண்டு இருந்தோம். அப்போது கண்ணாடி கீழே விழுந்து உடைந்துபோயிற்று. இதற்காகத்தான் அழுகிறோம். அப்பா அடிப்பாரே என்று பயப்படுகிறோம்'' என்றாள்.

12. தாயார்: 'ஐயோ, அப்படியா! நல்ல கண்ணாடியை உடைத்துவிட்டீர்களே. ஆனாலும் ஒன்றையும் ஒளிக்காமல் உண்மையைச் சொல்லி விட்டதில் எனக்கு மிகுந்த சந்தோஷம். நான் அப்பாவிடம் சொல்லி உங்களை ஒன்றும் செய்யாமல் பார்த்துக்கொள்ளுகிறேன். நீங்கள் நிஜத்தைச் சொன்னபடியால் அப்பா உங்களை அடிக்கமாட்டார்,'' என்று சொன்னார்.

---

6. பெற்றோர் வளர்த்த அருமை

1. அன்னைபோல அன்புடன்
தன்னையே எனக்களித்து
என்னை ஆதரித்தவர்
இந்நிலத்தில் யாவரே.

2. பத்துமாதமும் வயிற்றில்
வைத்தெனை அளித்துப்பின்
நித்தம் ஆதரித்த தாயை
ஒத்துளார்கள் யாவரே.
3. தந்தைபோல அன்புடன்
வந்து வேண்டியபொருள்
தந்து காத்தவர் எவர்
இந்தமா நிலத்திலே.
4. அன்னையும் பிதாவுமே
முன்னறிந்த தெய்வங்கள்
என்ன ஒளவை அன்புடன்
சொன்ன நீதி உண்மையே.



7. தலையும் வாலும்

1. முன்பு ஒரு காலத்தில் நீளமான வால் உள்ள பாம்பு ஒன்று இருந்தது. அது எங்கே போனாலும், வாலும் பின்னே போகும். தான் முன்னே போகவேண்டும் என்ற ஆசை வாலுக்கு உண்டாயிற்று.

2. அதற்காக, வாலானது, பாம்பின் தலையையும் உடம்பையும்பார்த்து, "நான்தான் முன்னே போகவேண்டும்" என்றது. அவை, "அது முடியுமா? உனக்குக் கண்ணும் இல்லை, மூக்கும் இல்லை, காதும் இல்லையே. எதிரில் ஏதாவது அபாயம் உண்டானால், உன்னால் பார்க்கவும் முடியாது: உன்னால் வாசனை அறியவும்முடியாது: கேட்கவும் முடியாதே. நீ எங்களுக்கு முன்னே எப்படி வழிகாட்டிக்கொண்டு போவாய்?" என்று கேட்டன.

3. ஆனால் அந்த வாலுக்கு அறிவு இல்லை: பிடிவாதமே பெரிதாக இருந்தது. தலையும் உடலும் சொன்ன புத்தியை அது கேட்கவில்லை. பலம் அதிகமாக இருந்ததனால் உருண்டு புரண்டு அது முன்னே போக ஆரம்பித்தது. அதற்கு வழி தெரியாமையால் ஒரு பாறையிலிருந்து புரண்டு ஒரு கெட்டியான கல்லின் மேல் விழுந்து விட்டது. அதனால் வாலிலும் உடலிலும் காயம்பட்டது.

4. அப்போதுதான் அதற்குப் புத்தி வந்தது. அது தலையைப் பார்த்து, "தலையே நீ நல்ல புத்திசாலி. நானே புத்தியில்லாதவன். என் மூடத்தனத்துக்காக என்னை மன்னிக்க வேண்டும். இனிமேல் நீயே முன்னே போ. உனக்கு நன்றாக வழி தெரியும். நான் பின்னாலேயே வருகிறேன்" என்றது.

புத்தியும் பலமும் உடையவர்கள் நடக்கிற வழியிலேதான் மற்றவர்கள் நடக்கவேண்டும்.

தலை இருக்க வால் ஆடுமா?



8. இரண்டு நண்டுகள்

1. சென்னப்பட்டணத்தில் கடற்கரையில் தாயும் குட்டியுமாக இரண்டு நண்டுகள் ஒரு வளையில் வசித்துக்கொண்டு இருந்தன. ஒருநாள் தாயானது குட்டியைப்பார்த்து, “வெயில் மட்டாகஇருக்கிறது, காற்று நன்றாக வீசுகிறது, நாம் வளையை விட்டு வெளியிலே போய் உலாவி வரலாம் வா,” என்று சொல்லி அதை அழைத்துக் கொண்டு போயிற்று.

2. போகும்போது, தாய் நண்டானது குட்டியைப் பார்த்து “குழந்தையே, நம்முடைய வளையிலிருந்து வெகு தூரம் போகாதே. என் பக்கத்திலேயே வா. பருந்தையாவது காக்கையையாவது பார்த்தால் நான் உனக்குத் தெரிவிக்கி

றேன். நீ உடனே போய் வளையில் ஒளிந்து கொள்" என்று சொல்லிற்று.

3. குட்டியானது இங்கும் அங்கும் ஓடி மணலில் விளையாடிக்கொண்டு இருந்தது. அதைப் பார்த்துத் தாய் நண்டானது, "குழந்தையே, நீ நேராக நடக்கவில்லை. ஒரு பக்கமாக நடக்கிறாய். அப்படி நடப்பது அவலட்சணம். நேராக நட" என்றது.

4. அதைக் கேட்டு, "தாயே, நீ நேராக நடந்து காட்டு. உன்னைப்போலவே நானும் நடக்கிறேன்" என்று குட்டி சொல்லிற்று.

தன்மட்டிலே ஒழுங்காக நடக்காதவன் ஒழுங்காக நடக்கும்படி பிறருக்குப் புத்தி சொல்வதில் நன்மை இல்லை.

---

9. நிலாவை அழைத்தல்

நிலா! நிலா! வா வா;
நில்லாமல் ஓடி வா;
மலை மேலே ஏறி வா;
மல்லிகைப் பூ கொண்டுவா;
நடு வீட்டில் வையே;
நல்ல துதி செய்யே;
வெள்ளிக் கிண்ணத்தில் பால் சோறு
அள்ளி எடுத்து அப்பன் வாயில்
கொஞ்சிக் கொஞ்சி ஊட்டு,
குழந்தைக்குச் சிரிப்புக்காட்டு.



10. பள்ளிக்கூடம் போதல்

1. ஆனந்தம் என்கிற ஒருபையனும் கமலம் என்கிற ஒரு பெண்ணும் மங்களூரில் இருக்கிறார்கள். அவர்கள் நடந்துபோகிறதை நீங்கள் படத்திலேபார்க்கலாம். புஸ்தகங்களை ஒருகையிலும் குடையை ஒரு கையிலும் வைத்துக்கொண்டு ஆனந்தம் முன்னே போகிறான். கமலம் புஸ்தகப் பையை எடுத்துக்கொண்டு பின்னேபோகிறாள். அவர்கள் எங்கே போகிறார்கள், தெரியுமா? அவர்கள் பள்ளிக்கூடத்திற்குப் போகிறார்கள். பள்ளிக்கூடத்திற்குப் புறப்படுவதற்கு முன் அவர்கள் வீட்டில் நடந்ததை உங்களுக்குச் சொல்லுகிறேன் கேளுங்கள்.

2. கமலம்: அம்மா, பள்ளிக்கூடம் போக நேரம் ஆயிற்று, என் தலையை வாரப்போகி ருயா, இல்லையா?

3. தாய்: ஏன் இவ்வளவு அவசரம். பின்னலை அவிழ்த்துக்கொள். எண்ணெய் தடவி வாரிப் பின்னிவிடுகிறேன். காலையில் நேரம் பொறுத்து எழுந்தாய். ஆகையால் நன்ருக இப்போது பின்னுவதற்கு நாழிகை இல்லை. பின்னுமல் முடி போட்டு விடுகிறேன்.

4. கமலம்: அண்ணன் எங்கே? அவன் இன்று என்னேடு பள்ளிக்கூடம் வரவில்லையா?

5. தாய்: அவன் உள்ளே அழுதுகொண்டு நிற்கிருன். வேஷ்டியை நேற்று அழுக்காக்கிக் கொண்டான். இன்று கட்டிக்கொள்ள வேறு சுத்தமான வஸ்திரம் இல்லை.

6. கமலம்: அம்மா, அழுக்குத் துணியைக் கட்டிக்கொண்டு பள்ளிக்கூடம் வரவேண்டாம் என்று நேற்று உபாத்தியாயர் அண்ணனிடம் சொன்னுர். ஆகையால், சட்டையும் சல்லடமும் போட்டு அனுப்பு.

7. தாய்: ஆனந்தம், இங்கே வா. உன் புஸ்தகங்கள் எங்கே?

8. ஆனந்தம்: நேற்று என் புஸ்தகங்களை உள்ளே பெட்டியில் வைத்தேன். அவைகள் இப்பொழுது அங்கே இல்லை.

9. கமலம்: இல்லை. இல்லை பெட்டியில் வைக்கவே இல்லை. நேற்று வீட்டுக்கு வந்ததும் புஸ்தகங்களை ஒரு மூலையில் எறிந்துவிட்டு உடனே விளையாடப் போனுய். விளையாடப் போய்வேஷ்டியையும் அழுக்காக்கிக்கொண்டாய். அதோ

அந்த மூலையிலே பார். உன் புஸ்தகங்கள் எல்லாம் போட்டவை போட்டபடி இருக்கின்றன.

10. பிறகு, ஆனந்தம் புஸ்தகங்களை எடுத்துக்கொண்டு பள்ளிக்கூடத்துக்கு வேகமாகப் போனான். கமலம் அவன் பின்னால் போனாள். சரியான வேளையில் அவர்கள் பள்ளிக்கூடம் போய்ச் சேர்வார்களா? கொஞ்சம் பரபரப்பாகப் போனால் போய்விடுவார்கள். இப்போதுதான் அதோ மணி அடிக்கிறார்கள். மணி ஓசை உங்களுக்குக் கேட்கவில்லையா?

---

11. எறும்பும் வெட்டுக்கிளியும்

1. தை மாதத்தில் ஒருநாள் வெட்டுக்கிளி ஒன்று ஒரு வயலில் ஆடிக்கொண்டும் பாடிக்கொண்டும் குதித்துக்கொண்டும் இங்கும் அங்கும் ஓடிப் புல்லைத் தின்றுகொண்டும் இருந்தது.

2. அப்போது ஓர் எறும்பானது அரிசியை இழுத்துக்கொண்டு கிட்டப் போயிற்று. அரிசி கனமாக இருந்ததனால் அதை வளைக்குக் கொண்டுபோவது கஷ்டமாக இருந்தது.

3. வெட்டுக்கிளி அதைப் பார்த்து, "தம்பி, ஏன் இவ்வளவு கஷ்டப்படுகிறாய்? வெயில் சுகமாக இருக்கிறது. இந்த இடம் நன்றாக இருக்கிறது. விளையாடலாம் வா" என்று சொல்லி அழைத்தது.

4. எறும்பு, "நான் வரமாட்டேன். மழைக் காலத்தில் இரை ஒன்றும் அகப்படாது. ஆகை

யால் அப்போது வேண்டிய இரையை இப்பொழுதே சேர்த்துவைக்கிறேன். இப்பொழுது விளையாடிக்கொண்டிருந்தால் பின்பு பட்டினி கிடக்கவேண்டுமே" என்று பதில் உரைத்தது.

5. அதைக் கேட்டு வெட்டுக்கிளி, "சீ, சீ, பைத்தியக்காரனாக இருக்கிறாய். இப்போது இரைக்கு ஒன்றும் குறைவு இல்லையே. அப்படியிருக்க வேடிக்கையாக விளையாடுவதை விட்டுவிட்டு, எப்பொழுதோ வரப்போகிற மழைக் காலத்துக்காக இப்பொழுதே கஷ்டப்படலாமா?" என்றது.

6. எறும்பு அதன் பேச்சைக் கேளாமல் தன் இஷ்டப்படியே தன் வேலையைச் செய்து வந்தது. ஒரு வீட்டுச் சுவரின் கீழே அதற்கு ஒரு பெரிய வளை இருந்தது. அதில் தனக்கும் தன்னைச் சேர்ந்த மற்ற எறும்புகளுக்கும் உப

யோகமாகும்படி பல தானியங்களைக் கொண்டு போய்ச் சேர்த்து வைத்தது.

7. பின்பு மழைநாள் வந்தது. அப்பொழுது வெட்டுக்கிளிக்கு இருக்க இடமும் இல்லை, உண்ண உணவும் இல்லை. வயல் எல்லாம் ஜலமாக இருந்தது. கடைசியில் குளிரினாலும் பசியினாலும் வருந்தி அது செத்துப்போயிற்று.

8. எறும்புமட்டும் முன்னமேயே சேர்த்து வைத்திருந்த தானியங்களைத் தின்றுகொண்டு மழையில் கொஞ்சமும் நனையாமல் சௌக்கியமாக இருந்தது. எப்போதும் முன் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்.

---

12. பராக்குக் காட்டல்

காக்கா! கண்ணுக்கு மை கொண்டுவா.
குருவி! கொண்டைக்குப் பூக் கொண்டுவா.
கொக்கு! குழந்தைக்குத் தேன் கொண்டுவா.
கிளியே! கிண்ணத்தில் பால் கொண்டுவா.

அப்பா முன்னே வாரும்.
அழாதே என்று சொல்லும்.

---

13. புத்தியில்லாத சுண்டெலி

1. ஒருநாள் இராத்திரி சுண்டெலியொன்று தன் தாயோடு வளையிலிருந்து வெளியே புறப்பட்டது. அங்கங்கே சிந்திக்கிடந்தவைகளையெல்லாம் பொறுக்கித் தின்றுகொண்டு இங்கும்

அங்கும் ஓடிக்கொண்டிருந்தது.

2. அப்போது ஒரு வீட்டின் அறையில் எலிக் கூடு வைக்கப்பட்டிருந்தது. அதன் உள்ளே தேங்காய்க்கீற்று ஒன்று வைக்கப்பட்டிருந்தது.

3. சுண்டெலி, "அம்மா இங்கே ஒரு சிறிய வீட்டை யாரோ கட்டிவைத்திருக்கிறார்கள். வசதியாக இருக்கிறது. தின்பதற்கும் உள்ளே கமகமவென்று வாசனையாக என்னவோ வைத்திருக்கிறார்கள். நான் உள்ளே போய் அதைத் தின்னலாமா?" என்று கேட்டது.



4. எலி, "குழந்தை, அங்கேபோகாதே. அது வீடு அன்று; எலிகளைப் பிடிக்கிற யந்திரம். உன்தகப்பன் ஒருதரம் அதற்குள் போனான். போய்த் தேங்காயைக் கடித்ததும், அதன் கதவு தடாரென்று மூடிக்கொண்டது. வெளியில் வர முடியாமல் தவித்துக்கொண்டு இருக்கையில், பொழுது விடிந்தது. ஒரு வேலைக்காரன் வந்து, உன் தகப்பனைக் கொன்றுவிட்டான்" என்று சொல்லிற்று.

5. அப்பால் அவை இரண்டும் தங்கள் வளைக்குப் போயின. புத்தி கெட்ட சுண்டெலி சும்மா இராமல் தேங்காயை நினைத்துக்கொண்டே சத்

தம் பண்ணுமல் அந்தக் கூட்டின் அருகே போயிற்று. "கதவு மூடிக்கொள்வதற்குள் நான் வெளியில் வந்துவிடுவேன்" என்று நினைத்துக்கொண்டே உள்ளேபோய்த் தேங்காயைக் கடித்து இழுத்தது. உடனே படக்கென்று கதவு மூடிக்கொண்டது.

6. சுண்டெலி உள்ளே அகப்பட்டுக்கொண்டது. வயதுசென்ற தன் தாயின் பேச்சைக் கேளாத புத்தியீனத்தை நினைத்து நினைத்து மிகவும் துக்கித்தது. அங்குமிங்கும் ஓடி, கூட்டின் வெளியே வருவதற்கு எவ்வளவோ பிரயத்தனம் செய்தும் வெளியே வர முடியவில்லை. பொழுது விடிந்ததும் ஒருவன் வந்து அதைக் கொன்றுவிட்டான்.

7. பிள்ளைகளே, உங்களைக்காட்டிலும் பெரியவர்கள் சொல்லுகிறபடி நடக்கவேண்டும்.

"மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்."

---

14. சாய்ந்தாடல்

சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு
தாமரைப் பூவே சாய்ந்தாடு.
கொத்து விளக்கே சாய்ந்தாடு
கோவில் புருவே சாய்ந்தாடு.
பச்சைக் கிளியே சாய்ந்தாடு
பவழக் கொடியே சாய்ந்தாடு.
சோலைக் குயிலே சாய்ந்தாடு
சுந்தர மயிலே சாய்ந்தாடு.
கண்ணே மணியே சாய்ந்தாடு
கற்பகக் கொடியே சாய்ந்தாடு.

கட்டிக் கரும்பே சாய்ந்தாடு
கனியே பாலே சாய்ந்தாடு.



15. பேராசை உள்ள நாய்

1. ஒருநாள் தெருவழியே ஓடிக்கொண்டிருந்த ஒரு நாயானது ஒரு மாமிசத்துண்டை

வழியில் கண்டெடுத்தது. கொஞ்சம் பொறுத்துத் தின்ன நினைத்து அதைக் கௌவிக்கொண்டு அந்த நாய் தன் வீட்டுக்குப்போயிற்று.

2. வீட்டுக்குப் போகிற வழியில் ஒரு சிறிய ஓடை உண்டு. அதற்கு ஒரு பாலம் இருந்தது. ஓடை நீர் தெளிவாக முகக்கண்ணாடிபோல் இருக்கும். யாராவது எட்டிப் பார்த்தால் அதில் அவர் முகம் நன்ருகத் தெரியும்.

3. பாலத்தில் நடக்கும்போது நாய் ஓடையை எட்டிப் பார்த்தது. அங்கே வேருெரு நாய் ஒரு மாமிசத் துண்டத்தைக் கௌவிக்கொண்டு போவதாகத் தெரிந்தது.

4. நாய், "என்னிடம் இருக்கிறதைக்காட்டிலும் அந்த மாமிசத்துண்டம் நேர்த்தியாக இருக்கிறது. அதைப் பிடுங்கிக்கொண்டால் இரண்டையும் திருப்தியாகத் தின்னலாம்" என்று நினைத்தது.

5. அப்படி நினைத்துத் தண்ணீரில் பார்த்த மாமிசத் துண்டத்தைக் கௌவிக்கொள்வதற்காக வாயைத் திறந்தது. உடனே வாயிலிருந்த மாமிசம் ஓடையில் விழுந்து முழுகிவிட்டது.

அதிக ஆசை அதிக நஷ்டம்

---

16. யானையும் குழந்தையும்

1. மயிலாப்பூரில் மிகவும் ஏழையாக ஒருத்தி இருந்தாள். வாழைப்பழம் விற்பது அவளுக்கு ஜீவனம். அவளுக்கு இரண்டு வயதுள்ள ஒரு குழந்தை உண்டு. கடைத்தெருவில் அவள்

கடை வைத்திருந்தாள். குழந்தை அவள் பக்கத்தில் விளையாடிக்கொண்டு இருக்கும்.

2. கோவில் யானை அடிக்கடி கடைத்தெரு வழியே குளத்துக்கு போகும். போகும்போது



அந்தக் கடைக்காரி யானைக்கு வாழைப்பழம் கொடுப்பாள். சில வேளைகளில் தன் குழந்தை கையில் வாழைப்பழத்தைக் கொடுத்து யானை யிடம் கொடுக்கச் சொல்லுவாள். குழந்தை யானையைக் கண்டு பயப்படாமல் வாழைப்பழத் தைக் கொடுக்கும். யானை தன் தும்பிக்கையை நீட்டி வாழைப்பழத்தை வாங்கிக்கொள்ளும். அப்போது குழந்தை சிரிக்கும்.

3. ஒருநாள் யானைக்குவெறி பிடித்திருந்தது. அப்போது காலிற் கட்டியிருந்த சங்கிலியை அறுத்துக்கொண்டு கடைத்தெருவில் வந்து

விட்டது. வழியில் அகப்பட்டதை வாரி யெடுத்து இப்படியும் அப்படியும் வீசியெறிந்தது. அதைப்பார்த்த உடனே கடைக்காரர்களும் தெருவில் உள்ள ஜனங்களும் பயந்து அங்குமிங்கும் ஓடிப்போனார்கள். வாழைப்பழம் விற்பவளும் ஓடிப்போய் ஒரு வீட்டுக்குள் புகுந்துகொண்டாள். போகிற அவசரத்தில் அவள் குழந்தையை எடுத்துக் கொண்டுபோக மறந்து விட்டாள்.

4. குழந்தையை யானை கொன்றுவிடும் என்றே எல்லாரும் நினைத்தார்கள். அங்கே வந்தபோது யானை துதிக்கையால் குழந்தையை மெத்தென்று எடுத்துக்கொண்டது. தாயானவள் பயத்தினால் நடுநடுங்கி வீட்டின் கதவோரமாக நின்றுகொண்டுஇருந்தாள். யானை அங்கே போய்க் குழந்தையை அவளிடம் கொடுத்து விட்டு உரக்கக் கத்திக்கொண்டு ஓடிப்போயிற்று.

உபகாரம் வீண் போகாது

---

17. தாலாட்டு

ஆராரோ ஆரிவரோ ஆராரோ ஆரிவரோ
முத்தே பவளமே
முக்கனியே சர்க்கரையே
கொத்து மருக்கொழுந்தே
கோமளமே கண்வளராய்.—ஆராரோ
பொன்னே நவமணியே
பூங்கொடியே பூஷணமே
அன்னமே என்னுடைய
ஆசையே கண்வளராய்.—ஆராரோ

கற்கண்டே பாகே
கனிரசமே செங்கரும்பே
கற்பகமே என்னுடைய
கண்மணியே கண்வளராய்.—ஆராரோ

---

18. காக்கையை வஞ்சித்த நரி

1. ஒருநாள் வெயில் மிகவும் கடுமையாக இருந்தது. அன்று ஒரு நரியானது பகல் முழுவதும் தன்னுடைய பொந்தில் தூங்கிவிட்டு மாலைவேளையில் விழித்துக்கொண்டது. விழித்துக்கொண்டவுடனே சோம்பல் முறித்து எழுந்து, ஏதாவது இரை தேடலாமென்று புறப்பட்டு வெளியே போயிற்று.

2. அங்கே ஒரு காக்கையானது ஒரு வடையை வைத்துக்கொண்டு ஒரு மரக்கிளையில் இருந்தது. மரத்தின்கீழே போய்க்கொண்டிருந்த நரி காக்கையைப் பார்த்தபோது, உதட்டை நாக்கினுல் தடவிக்கொண்டே, "அந்த வடையை எப்படியாவது கவர்ந்து தின்னவேண்டும். அது கொஞ்சமாஞலும் என்ன? பசிவேளையில் கிடைத்தது லாபந்தானே" என்றுஉட்கார்ந்துயோசனை செய்தது.

3. "காக்கையையே பிடித்துவிட்டால் காக்கையையும் தின்னலாம்: வடையையும் தின்னலாம். ஆனல் காக்கை இப்போது நமது கையில் அகப்படாது. எப்படிப்பட்டவர்களையும் கொஞ்

சம் முகஸ்துதி செய்தால் காரியம் கைகூடும்" என்று எண்ணி, நரி காக்கையை நோக்கிச் சொல்லுகிறது.

4. "ஆ! ஆ! அந்த மரத்தில் இருக்கிற பக்ஷி எவ்வளவு அழகாக இருக்கிறது! அதைப் பக்ஷி ராஜா என்றே சொல்லலாம். அதன் இறகுகள் பட்டுப்போல அழகாக உள்ளன. அவற்றிற் கேற்றபடி வாலும் மிக நேர்த்தியாக இருக்கிறது! இப்படிப்பட்ட இறகுகளையும் வாலையும் நான் பார்த்ததே இல்லை."

5. இதற்குமுன் இந்தமாதிரி காக்கையை யாரும் புகழ்ந்ததே யில்லை. ஆகையால் இதைக் கேட்ட காக்கை அதிக ஆனந்தம் கொண்டு ஒன்றும் பேசாமல் இருந்தது.

6. காக்கையை எப்படியாவது வாயைத் திறக்கும்படி செய்யவேண்டும் என்பது நரியின்கருத்து. அதனால் நரி மறுபடியும், "ஓ அரசே! உன் குரல் மிகவும் இனிமையானதென்று கேள்விப்பட்டிருக்கிறேன். குயில்கூட உன்னைப்போல இனிமையாகப் பாடுவதில்லையாமே. ஏதாவது ஒரு பாட்டுப் பாடிக் காட்டமாட்டாயா?" என்று கேட்டது.

7. இதைக் கேட்டதும் காக்கை தன் வாயில் இருந்த வடையை மறந்துவிட்டது; கொஞ்சம் பாடிக்காட்டலாமென்று வாயைத் திறந்தது. வாயைத் திறந்து, "கா! கா!!" என்பதற்குள், வடை கீழே விழுந்துவிட்டது. உடனே நரி அதை எடுத்து விழுங்கிவிட்டது.

---

19. மதிகெட்ட ஆட்டுக்குட்டி

1. ஓர் இடையனிடத்தில் அநேக ஆடுகளும் ஆட்டுக்குட்டிகளும் இருந்தன. அவன் நல்ல பசும்புல் உள்ள இடத்தில் அவைகளை மேய்த்துவருவது வழக்கம்.

2. செங்குத்தான மலையில் ஏறிப் போகும் போது ஆட்டுக்குட்டிகள் நடக்க முடியாமல் வருத்தப்பட்டால் அவன் தன் தோளின்மேல் தூக்கிக்கொண்டு போவான்.

3. அவைகள் மேயும்போது அவன் புல்லாங்குழல் வாசிப்பான். இவ்விதமாக ஆடுகளும் ஆட்டுக்குட்டிகளும் அவனிடத்தில் மிகவும் சுகமாக வளர்ந்து வந்தன.

4. தினந்தோறும் சாயங்காலத்தில் அவன் ஆடுகளை யெல்லாம் ஒரு கொட்டிலில் அடைத்து வைப்பான்.

5. வெளியில் நாய்கள் காவலிருந்தமையால், ஓநாய், சிறுத்தை முதலியவைகள் வந்து ஆடுகளை ஒன்றும் செய்யமுடியாது. யாராவது கிட்ட வந்தால், நாய்கள் குரைத்து அவர்களைத் துரத்திவிடும்.

6. இப்படி அவைகளை அவன் கவனமாகக் காப்பாற்றி வந்தமையால் ஆடுகளெல்லாம் அவனிடத்தில் அன்பு பாராட்டி வந்தன. ஓர் ஆட்டுக்குட்டி மாத்திரம், இரவில் கொட்டிலில் அடைபட்டிருப்பது சரிப்படாமல் அருவருப்பு அடைந்தது.

7. அதனால் ஒருநாள் அது தன் தாயிடத்தில், "இரவில் நம்மை ஏன் இப்படி அடைத்து

வைக்கவேண்டும். இது பெரிய வேதனையாக இருக்கிறது. இரவில் நிலா வெளிச்சத்தில் அங்கும் இங்கும் ஓடி ஆடித்திரிவது எவ்வளவு சந்தோஷமாக இருக்கும்? கூடுமானால் நான் வெளியில் நழுவி விடலாமென்று நினைக்கிறேன்" என்றது.

8. அதைக்கேட்ட தாயாடு, "குழந்தாய்! உனக்கு ஞானம் இல்லை. நீ கொட்டிலிலேயே இரு. நீ தனியாக இரவில் காட்டில் திரிவாயானால் நிச்சயமாக ஏதாவது அபாயம் நேரிடும்" என்று சொல்லிற்று.

9. குட்டியானது, "ஒரு கெடுதியும் வராது" என்று சொல்லி, சாயங்காலத்தில் இடையன் ஆடுகளைக் கொட்டிலில் அடைக்கும்போது, ஒரு வேலி மறைவில் ஒளிந்திருந்து, மற்ற ஆடுகள் தூங்கினபிறகு காட்டுக்குப் போய் உல்லாசமாக உலாவிக்கொண்டே வெகுதூரம் போய்விட்டது.

10 கொஞ்சநேரத்தில் ஓநாய் ஒன்று ஒரு குகையிலிருந்து ஊளையிட்டுக்கொண்டு வந்து ஆட்டுக்குட்டியைப் பார்த்தது. அப்போது ஆட்டுக்குட்டி திகில் அடைந்து, "ஐயோ கொட்டிலில் தாயோடு பத்திரமாக இராமல், மதிகெட்டு வந்து இதனிடத்தில் அகப்பட்டுக் கொண்டேன்" என்று அழுதது. ஓநாய் உடனே அதைத் தூக்கி எடுத்துக்கொண்டு போய்த் தன் குட்டிகளிடம் கொடுத்தது.

11. ஓநாயின் குட்டிகள் அதைத் துண்டு துண்டாகக் கிழித்துத் தின்றுவிட்டன.

மூத்தோர் சொல்லை அலட்சியம் செய்யலாகாது.

20. கை வீசுதல்

கை வீசம்மா கை வீசு
கடைக்குப் போகலாம் கை வீசு.
பக்ஷணம் வாங்கலாம் கை வீசு
பாடித் தின்னலாம் கை வீசு.
பழங்கள் வாங்கலாம் கை வீசு
பரிந்து புசிக்கலாம் கை வீசு.
சட்டை வாங்கலாம் கை வீசு
தரித்துக் கொள்ளலாம் கை வீசு.
கோயிலுக்குப் போகலாம் கை வீசு
கும்பிட்டு வரலாம் கை வீசு.
தேரைப் பார்க்கலாம் கை வீசு
திரும்பி வரலாம் கை வீசு.

---

21. புறுக்களும் வேடனும்

1. தக்ஷிண தேசத்தில் ஒரு காட்டில் ஆணும் பெண்ணுமாக இரண்டு புறுக்கள் ஓர் அரசமரத்தில் வாழ்ந்துவந்தன. அவை நெடுங்காலமாக அங்கேயே முட்டையிட்டுக் குஞ்சுபொரித்துக் குஞ்சுகளை வளர்த்துக் கொண்டு சுகமாக இருந்தன.

2. ஒருநாள் ஒரு வேடன் அந்தக் காட்டுக்கு வந்தான். ஒரு வில்லும் அம்புக்கூடும் ஒரு வலையும் அவன் தோளில் தொங்கின. அன்று அவனுக்கு ஒன்றும் வேட்டையில் அகப்படவில்லை. அவன் வந்த வழியில் உள்ள பக்ஷிகள் அவனைப் பார்த்ததும் பறந்து போய் விட்டன.



3. கடைசியாக அவன் அந்த அரசமரத் தண்டை வந்தான். வந்து மரத்து நிழலில் நின்றுகொண்டு மேலே பார்க்கும்போது, புருக் கள் இரண்டும் சேர்ந்து உட்கார்ந்திருப்பது தெரிந்தது. உடனே ஓர் அம்பை எடுத்து வில்லில் தொடுத்து அவைகளின்மேல் எய்வ தற்காகக் குறிபார்த்து நின்முன்.

4. அப்போது அரசமரத்தின்மேல் ஒரு பருந்து வட்டமிட்டுக்கொண்டு இருந்தது.

கீழே வேடனும் மேலே பருந்தும் இருப்பதைப் புறுக்கள் பார்த்து மிகுந்த பயம் அடைந்தன. அவைகள், ஒரு பக்கமும் போக முடியவில்லை.

5. கண்ணை மூடிக்கொண்டு, அவைகள், தங்களைக் காப்பாற்றவேண்டுமென்று கடவுளைப் பிரார்த்தித்தன. பிழைப்போம் என்கிற எண்ணம் அவைகளுக்குச் சிறிதும் இல்லை.

6. அப்படி இருக்கையில், வேடன் அம்பு எய்யக் கையை எடுத்தான். அப்போது மரத்தடியில் ஒரு வளையில் இருந்து வந்த பாம்பொன்று அவன் காலைக் கடித்தது. அவன், 'அப்பாடா' என்று ஒரு பக்கமாக அலறி விழுந்தான். அதனால் அம்பு புறுக்களின் மேல் படாமல், மேலேயிருந்த பருந்தின் உடலிற் பாய்ந்து, அதைக் கொன்றுவிட்டது. பாம்பு கடித்ததனால் வேடனும் உடனே இறந்தான்.

கடவுளை நம்பினோர் கைவிடப்படார்

---

22. சிற்றுண்டி

மாமி செய்த லட்டு
    வாங்கி மடியில் கட்டு
எடுத்துக் கொஞ்சம் பிட்டு
    எனக்கு முன்னே இட்டு
உண்டு விடு எப்பம் :
    ஓடு கொஞ்சம் பார்ப்போம்.

---

23. நரியும் மத்தளமும்

1. பேராசை கொண்ட ஒரு நரியானது ஒரு நாள் காலையில் இரைதேடித் திரிந்தது. அப்போது ஒரு தோட்டத்தில் ஒரு குருவி தரையில் உட்கார்ந்து இருந்தது. அந்தக் குருவியை நரி பிடிக்க நினைத்தது.

2. நினைத்துக்கொண்டே நிமிர்ந்து பார்க்கையில் மேலே ஒரு மரக்கிளையில் ஒரு மத்தளம் தெரிந்தது. அந்த மத்தளத்தைத் தோட்டக்காரன் அந்த மரக்கிளையில் மாட்டிவைத்திருந்தான். நரி அதற்குமுன் எப்பொழுதும் மத்தளத்தைப் பார்த்ததே இல்லை. அதனால் அது இன்னதென்று நரிக்குத் தெரியவில்லை. நன்றாய்க் கொழுத்த ஒரு ஜந்துவாக இருக்கலாம் என்று அது நினைத்தது.

3. அதைக் கொன்று தின்ன எண்ணி நரி உடனே ஒரு குதி குதித்து மத்தளத்தைக் கீழே தள்ளிவிட்டது. மத்தளத்தின் தோலைப் பல்லாற் கடித்துக் கிழித்தது. அதன் உள்ளே ஒன்றும் இல்லை.

4. மத்தளத்தின்மேல் நரி பாய்வதைக் கண்ட குருவியானது கூவிக்கொண்டே பறந்து போய்விட்டது. நரி குதிக்காவிட்டால், அதைக் குருவி பார்த்திராது.

5. அதன்மேல் நரி, "என்னைப்போன்ற மூடன் உண்டா? என் பேராசையால் இப்படி நேரிட்டது. இப்பொழுது தின்பதற்கு ஒன்றும் இல்லையே. ஒன்றுக்கும் உதவாத இந்தப் பெரிய வஸ்துவின்மேல் ஏன் ஆசை வைத்தேன்? ஐயோ! அந்தக் குருவியைப் பிடித்திருந்தால் என் பசி அடங்கியிருக்குமே" என்று துக்கப்பட்டது.

கிடைத்ததைக்கொண்டு திருப்தி
அடையவேண்டும்

---

24. கரடியும் இரண்டு சிறுவர்களும்

1. கரடி காட்டு மிருகங்களுள் ஒன்று. பழங்களையும் கிழங்குகளையும் அது தின்னும். மனிதரைக் கண்டால் அது கொல்லும்: பிணத்தை மாத்திரம் ஒன்றும் செய்யாது.

2. ஒரு காலத்தில் சுந்தரம் இரத்தினம் என்ற இருவர் ஒரு காட்டின் வழியே போய்க்

கொண்டு இருந்தார்கள். அப்போது சுந்தரம், "பயமாக இருக்கிறது. புலியாவது கரடியாவது வந்தால் என்ன செய்கிறது?" என்றான்.



3. இரத்தினம், "பயப்படாதே. நான் பார்த்துக்கொள்ளுகிறேன்" என்றான்.

4. அப்போது ஒரு புதரிலிருந்து ஒரு கரடி திடீரென்று புறப்பட்டது. இரத்தினம் சத்தம் பண்ணாமல் ஒரு மரத்தின்மேல் ஏறி ஒளித்துக் கொண்டான். கரடிகள் பிணத்தைத் தொடுவது இல்லையென்பது சுந்தரத்துக்குத் தெரியும்.

அதனால் அவன் செத்தவனைப்போல் மூச்சை அடக்கிக்கொண்டு தரையிற் படுத்திருந்தான்.

5. கரடி அங்கு வந்து, சுந்தரத்தின் முகத்தையும் காதுகளையும் மோந்து பார்த்து, அவனைப் பிணம் என்று நினைத்து ஒன்றும் செய்யாமற் போய்விட்டது.

6. கரடி போனபிறகு, இரத்தினம் மரத்திலிருந்து இறங்கிவந்து சுந்தரத்தைப் பார்த்து, "கரடி உன் காதண்டை ஏதோ இரகசியம் பேசிற்றே என்ன சொல்லிற்று?" என்று கேட்டான்.

7. அதற்குச் சுந்தரம், "பயப்படாதே என்று தைரியப்படுத்தி, அபாயம் வந்தபோது ஓடி ஒளிக்கிறவர்களை நம்பாதே என்று சொல்லிற்று" என்று சொன்னான்.

---

25. நரியும் கொக்கும்

1. ஒரு நரி ஒருநாள் ஒரு கொக்கினிடம் போய் "ஐயா, இன்று எங்கள் வீட்டில் உமக்கு விருந்து; தயவுசெய்து வரவேண்டும்" என்று சொல்லி அழைத்தது. நல்லது என்று கொக்கு நரியின் வீட்டுக்குப் போயிற்று.

2. நரியானது தன்னிடத்தில் உள்ள மாமிசத்தை மிகவும் சிறிய துண்டுகளாக அரிந்து அகலமான தட்டிற் பரப்பி வைத்தது.

3. கொக்கின் மூக்கு அதிக நீளமானது. அதனால், துண்டு துண்டாக இருந்த மாமிசத்தைப்

பொறுக்கி அதிகமாகத் தின்ன முடியாமல் மிகவும்கொஞ்சமாகவே தின்றது. நரிபரபரவென்று எல்லாவற்றையும் தின்றுவிட்டு ',ஐயா, உங்களுக்குப் பசி இல்லையா? ஏன் கொஞ்சம் கொஞ்சமாகச் சாப்பிடுகிறீர்கள்? நன்றாக அள்ளிச் சாப்பிடுங்கள். ஏன் கூச்சப்படவேண்டும்?'' என்றது.

4. விருந்து உண்ணுவதற்காகப் பசியோடு வந்த கொக்கு, நன்றாக உண்ண முடியாமல் பசியோடே திரும்பிப் போயிற்று. போகும்போது, "ஐயா, எனக்கு விருந்திட்டதற்காக வந்தனம். நாளைக்கு எங்கள் வீட்டில் உமக்கு விருந்து. அவசியம் தயவு பண்ணவேண்டும்,'' என்று வேண்டிக்கொண்டது.

5. மறுநாள் நரி சந்தோஷமாகக் கொக்கின் வீட்டுக்குப் போயிற்று. கொக்கு நல்ல மீன்களைத் துண்டு துண்டாக நறுக்கிவாய் குறுகலான ஜாடியில் போட்டு வைத்தது.

6. நரிக்கு அந்த ஜாடியில் தலையை நுழைக்க முடியவில்லை. கொக்குமட்டும் சீக்கிரத்தில் தின்றது. ஜாடியின்மேல் சிந்தியிருந்ததை நரி நக்

கொண்டு இருந்தது. கொக்கு, "ஏன் ஐயா, சாப் பாடு திவ்வியமாக இருக்கிறதே. நன்றாகச் சாப் பிடுங்கள். ஏன் சும்மா இருக்கிறீர்கள்?" என்றது.

7. நரியானது, "அடடா, எல்லாரும் என் னிடத்தில் ஏமாறுவது வழக்கம். இந்தக் கொக்கு என்னையே ஏமாற்றிவிட்டது" என்று வெறுப்பு அடைந்து வெட்கத்தால் தலை குனிந்து போய்விட்டது.

பிறரை ஏமாற்ற நினைப்பவன்
தானே ஏமாந்து போவான்

---

26. உனக்கு என்ன வேண்டும்?

இங்கே கொஞ்சம் நில்லு
என்ன வேண்டும் சொல்லு.
அங்கே போனால் ஒன்றும்
அகப்படா தென்றும்.— இங்கே

இந்தக் கடையைப் போல
எங்கு மில்லை மேலே.— இங்கே
பூவும் பழமும் உண்டு
பொருந்த வாங்கலாம் கொண்டு.—இங்கே
இந்தக் கையை நீட்டு
என்ன வேண்டும் காட்டு.— இங்கே



27. மயிலும் வயிரமும்

1. தஞ்சாவூரிலிருந்து மாயவரத்துக்குப் போகும் சாலையில் அனுமார் கோயில் ஒன்று உண்டு. அந்தக் கோயிலுக்கு அடுத்த வயல்களில் ஒரு பெரிய மயில் இருந்தது. அது மிகவும் அழகுள்ளது. பகலில் வயல்களில் உலாவி, தானிய மணிகளைப் பொறுக்கித் தின்னும். இரவில் பறந்து போய் அருகில் உள்ள ஆலமரத்தில் சௌக்கியமாகத் தூங்கும்.

2. அதனோடு ஒரு பெண் மயிலும் இருந்தது. ஆண்மயிலுக்கு அதனிடத்தில் அதிக ஆசை: நல்ல உணவு கிடைத்தால் அதற்குக் கொடுக்கும். பெட்டைக்கு உணவு தேடிக்கொடுப்பதே அதற்கு வேலை. பெட்டையும் ஆணினிடத்தில் அதிக மரியாதையாக இருந்தது: அந்த ஆண்மயிலைப்போன்ற புத்திசாலி வேறு எதுவும் இல்லையென்று நினைத்திருந்தது.

3. ஒருநாள் ஆண்மயில் வயல்களில்உலாவி இரைதேடித் தரையைச் சீய்த்துக்கொண்டு இருக்கையில், ஏதோ ஒன்று பளிச்சு பளிச்சென்று காணப்பட்டது. அது ஒரு வயிரக்கல். அதன் விலை அநேகம் ஆயிரம் ரூபாய் இருக்கும். மயில் அதை அலட்சியமாகக்காலால் ஒதுக்கித் தள்ளிவிட்டு, பெட்டையைப் பார்த்து, "ஐயோ, நல்ல கோதுமை ரவை என்று பார்த்தேன். இது என்னவோ உபயோகம் அற்ற ஒரு கல்லாக இருக்கிறது," என்றது.

4. பெட்டையும், "மெய்தான். இப்படிப் பட்ட நவமணிகள் நூறு அகப்பட்டாலும் நமக்கு என்ன உபயோகம்? ஒரு தானியம் அகப்பட்டால் அதுவே மேலாக இருக்கும்," என்று சொல்லிற்று.

அருமையான பொருள்கள்
அருமை அறிந்தவர்களுக்கே ஏற்றவை

---

28. தாயின் அருமை

தாயாருன்னை வளர்த்த அருமை
சாற்றிடுவாய் துரையே

ஓயாமலுன்னைத் தொட்டிலிலேற்றி
உன்வருத்தங்களெல்லாம்மாற்றி.— தாயார்
நீவிழிக்கும் முன்னே விழித்து
நீவேண்டாப் பொருளைக்கழித்து.— தாயார்
ஆவிபோலே உன்னை நினைந்து
ஆபரணங்களாலேபுனைந்து.— தாயார்
மாலைப்பொழுதில் வெந்நீராட்டி
மகிழ்ந்துதலையில் பூவைச்சூட்டி.— தாயார்
பாலுஞ்சோறும் அன்பின்ஊட்டி
பார்க்கவேடிக்கை பலவுங்காட்டி.— தாயார்

---

29. கிழக்கிளியும் கவனமற்ற சிறுவனும்

1. அரங்கன் என்று ஒரு சிறுவன் இருந்தான். அவன் மாமன் அவனுக்கு ஒரு கிளிப்பிள்ளை கொடுத்தான். அரங்கன் அந்தக் கிளியை ஒரு கூட்டில் விட்டு அதிக அன்பாக வளர்த்து வந்தான். ஒவ்வொரு தினமும் அவன் அதற்குப் பழங்கள் சம்பாதித்துக் கொடுப்பான்.

2. ஒவ்வொரு வேளை அரங்கன் கிளியைக் கூட்டிலிருந்து எடுத்துக் கையில் வைத்துக் கொஞ்சுவான். அவ்வளவு ஆசையாக இருந்ததனால் அவனை அது கடிப்பதில்லை.

TB 031,3(2) N29

85046

3. அரங்கனது தாய் அந்தக் கிளிக்குக் கொஞ்சம் பேசக் கற்றுக்கொடுத்தாள். அது காலையில், "ரங்கா, ரங்கா, எழுந்திரு. பள்ளிக்கூடம்போ. புஸ்தகங்களை எடுத்துக்கொண்டு பள்ளிக்கூடம்போ" என்று சொல்லும். உடனே எழுந்து அரங்கன் அப்படியே புஸ்தகங்களை எடுத்துக்கொண்டு பள்ளிக்கூடம் போவான்.

4. ஒருநாள் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளில் ஒருவன், பள்ளிக்கூடம் விட்ட பிறகு காற்றுடி விடலாமென்று அரங்கனை அழைத்தான். விளையாட்டில் அவனுக்கு மிகுந்த பிரியம். அரங்கன் சாயங்காலம் அவனோடு போய் அதிக நேரம் விளையாடிக்கொண்டு இருந்தான். வீட்டுக்குத் திரும்பும்போது இருட்டிவிட்டது. கிளிக்கு இரைகொடுக்க மறந்துவிட்டான்.

5. மறுநாள் வழக்கம் போலவே அரங்கன் பள்ளிக்கூடம் போனான். வேறொரு பையன் ஒரு புதிய பம்பரம் வைத்திருந்தான். சாயங் காலம் வீட்டுக்குப் போகிறபோது பம்பரம் விளை யாட அவன் அரங்கனை அழைத்தான். அப் படியே அவர்கள் இருவரும் அதிக நேரம் பம் பரம் விளையாடிக்கொண்டு இருந்தார்கள். அன் றைக்கும் அரங்கன் கிளிக்கு இரை கொடுக்க மறந்துவிட்டான்.

6. மூன்றாவது நாள்தான் அரங்கனுக்குக் கிளியின் ஞாபகம் வந்தது. ஒரு வாழைப்பழம் வாங்கி எடுத்துக்கொண்டு கிளியினிடம் போனான். கிளி, கூட்டின் அடியிலே செத்துக் கிடந்தது. அது மூன்று நாள் வரையில் இரை இல்லாமல் உயிரோடு இருக்குமா? அதைப் பார்த்து அரங்கன் தேம்பித் தேம்பி அழுதான். அழுது என்னபலன்? செத்தபட்சி திரும்பி வருமா?

எதையும் காலத்திற் செய்யவேண்டும்

---

30. மழையை அழைத்தல்

வாவா வா மழையே மனங்குளிர
வாவா வா மழையே.

வாவி குளங்கள் ஏரி நிறைய
மா நிலத்து வெப்பங் குறைய.— வாவா
காய்ந்த மரங்கள் தழைத்துச் செழிக்க
காசினி யெல்லாம் செல்வம் கொழிக்க.— வாவா
வறுமை யெங்கும் ஓடி யொளிக்க
மானிடர்கள் மனம் களிக்க.— வாவா

31. பிள்ளைகளும் தவளைகளும்

1. வங்காளத்தில் ஒரு கிராமத்தில் ஒரு சிறிய பள்ளிக்கூடம் இருக்கிறது. ஒருநாள் கனத்த மழை பெய்தது. அப்போது வழியில்

உள்ள குளங்களிலும் கிணறுகளிலும் ஜலம் நிறைந்து வழிந்தது. பள்ளிக்கூடத்துக்கு அருகில் உள்ள நிலம் கொஞ்சம் பள்ளம். ஆகையால், அவ்விடத்திலும் ஜலம் நிறைந்திருந்தது. அநேகம் பிள்ளைகள் ஜலத்தில் இறங்கிப் போகப் பயந்து, பள்ளிக்கூடம் போகாமல் வீட்டுக்குத் திரும்பிவிட்டார்கள்.

2. மழைபெய்த சந்தோஷத்தால் கிராமத்தில் உள்ள தவளைகள் எல்லாம் உரக்கக் கத்திக்கொண்டு இருந்தன. குளத்தில் தவளைகள் கத்துவதைக் கேட்டு, சில பிள்ளைகள் அந்தக் குளக்கரைக்குப் போனார்கள்.

3. தவளைகள் சந்தோஷமாகக் குதிப்பதைப் பார்த்து அவர்கள் அவைகளின்மேல் கல்லை எடுத்து எறிந்தார்கள். அதனால் தவளைகள் கலக்கம் அடைந்து, பல பக்கங்களிலும் குதித்து ஓடத்தொடங்கின. பிள்ளைகள் சிரித்துக்கொண்டு பின்னும் கல்லை எறிந்தார்கள். அநேகம் தவளைகள் செத்துப்போயின.

4. அப்போது ஒரு கிழத்தவளை ஒரு கல்லின்மேல் ஏறிக்கொண்டு, ஒரு பிள்ளையைப் பார்த்து, "தம்பி, நாங்கள் உங்களுக்கு என்ன கெடுதி செய்தோம்? ஏன் எங்களை இப்படி வதைக்கிறீர்கள்?" என்று கேட்டது, அதற்கு அவன், "இல்லை, இல்லை, நாங்கள் வேண்டுமென்று செய்யவில்லை. சும்மா விளையாடுகிறோம். இது தவளை விளையாட்டு" என்று சொன்னான்.

5. அதைக் கேட்ட கிழத்தவளை, "மெய்தான், அப்பா. உங்களுக்கு விளையாட்டாக

இருப்பது எங்களுக்குப் பிராண சங்கடமாக இருக்கிறதே" என்று சொல்லி ஜலத்தில் குதித்துவிட்டது.

6. அவன் கொஞ்சம் நல்ல பிள்ளை; இரக்கம் உள்ளவன். மற்றப் பிள்ளைகளைப் பார்த்து, அவன், "இனிமேல் கல் எறிய வேண்டாம். நிறுத்துங்கள். விளையாட்டிலும் ஜீவவதை செய்யக்கூடாது" என்றான்.

ஜீவகாருண்யமே சிறந்த தருமம்

---

32. நிலாச்சோறு சமைத்தல்

அரிசியைக் குத்து முன்னே:
    அரித்துக் கழுவு பின்னே
உலையில் அரிசி போடு:
    உடனே மேலே மூடு.
கொதித்து வெந்தபின் வடித்துக்
    கொட்டி ஆற்று எடுத்து
கத்தரிக்காயை அரிந்து
    காரம் புளிப்புத் தெரிந்து
உப்பும் காயமும் போட்டு
    ஒத்தி ருக்கக் கூட்டு.
வெந்த பின்னே தாளித்து
    விரித்த இலையில் படைத்து
யாவரும் கூடிப் புசிப்போம்:
    இன்ப மாக வசிப்போம்.

---

33. பிராமணனும் கீரிப்பிள்ளையும்

1. காசியில் தேவநாமன் என்று ஒரு பிராமணன் இருந்தான். குழந்தை யில்லாமையால் அவனும் அவன் மனைவியும் தங்கள் சொந்தக் குழந்தையைப்போலவே ஒரு கீரிப்பிள்ளையை அருமையாக வளர்த்து வந்தார்கள். சிலகாலம் சென்ற பிறகு அவர்களுக்கு ஒரு குழந்தை பிறந்தது.

2. குழந்தையை ஒருநாள் தொட்டிலில் தூங்கச் செய்துவிட்டு, பிராமணத்தி கணவனைப் பார்த்து "நான் கங்கைக்குப் போய் ஸ்நானம் பண்ணிவிட்டு வருகிறேன். அதுவரையில் குழந்தையை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொண்டிருங்கள். கீரிப்பிள்ளை குழந்தையை ஒருவேளை கடிக்கப்போகிறது" என்று சொல்லிவிட்டு ஒரு குடத்தை யெடுத்துக்கொண்டு போனாள்.

குழந்தையும் தொட்டிலில் தூங்கிக்கொண்டிருந்தது.

3. அப்போது அயல்வீட்டுக்காரன் அந்தப் பிராமணனை ஏதோ காரியமாக அழைத்தான். உடனே பிராமணன் அவனிடம் போய்க் கொஞ்சநாழிகை பேசிக்கொண்டிருந்தான்.

4. அவன் வெளியே போனபிறகு கீரிப்பிள்ளை தொட்டிலின்கீழே படுத்துக்கொண்டிருந்தது. அப்போது ஒரு பாம்பு தொட்டிலின் சங்கிலிவழியாக இறங்கியது. உடனே கீரிப்பிள்ளை பாய்ந்து அந்த நாகத்தைத் துண்டு துண்டாகக் கடித்து எறிந்து குழந்தையின் உயி



ரைக் காப்பாற்றியது. பாம்பைக் கடித்ததனுல் கீரிப்பிள்ளையின் முகமெல்லாம் இரத்தமாக இருந்தது.

5. நாகத்தைக் கொன்று குழந்தையைக் காப்பாற்றிய சந்தோஷத்தைத் தெரிவிப்பதற் காக, கீரிப்பிள்ளை வெளிக் கதவோரம் வந்து நின்றது. அயல்வீட்டிலிருந்து அப்போது வந்த பிராமணன் கீரிப்பிள்ளையின் முகம்

இரத்தமயமா யிருப்பதைப் பார்த்தான். குழந்தையைத்தான் அது கடித்துவிட்டதென்று எண்ணிக்கொண்டு அவசரமாக ஒரு தடியால் அதை அடித்துக் கொன்று விட்டான்.

6. பின்பு குழந்தை உயிரோடிருப்பதையும் நாகம் இறந்து கிடப்பதையும் அவன் கண்டு தான் அவசரப்பட்டுச் செய்த காரியத்தை நினைத்து வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு, "என் அருமைக் குழந்தையாகிய கீரிப்பிள்ளையைக் கொன்றுவிட்டேனே" என்று அழுதான்.

7. கங்கைக்குப் போய்வந்த அவன் மனைவி கணவன் அழுவதைப் பார்த்து "ஏன் அழுகிறீர்கள்" என்று கேட்க, அவன் நடந்த சமாசாரத்தைச் சொன்னான். கேட்டு அவளும் துக்கம் அடைந்தாள்.

அவசரக்காரனுக்குப் புத்தி மட்டு

---

31. அத்தைமகனை ஏசல்

அத்தை மகன் நின்றுலாவும்
அழகைப் பார் ஐயா.
மெத்தச் சரிந்து விழுந்த வயிறும்
சொத்தைப் பல்லும் தோன்ற அசைந்து
—அத்தை
சட்டையும் தலைக் குட்டையும் மிகச்
சாய்ந்த பார்வையும் போர்வையும் கொண்டு.
—அத்தை
காலை யகலவைத்து நடக்கும் காட்சியும்
மீசை நீட்சியும் கொண்டு.— அத்தை
அடிக்கடி கடியாரம் பார்த்தே
அதிக விரைவில் தலையெடுத்தே — அத்தை

முதலாவது

கதா வாசக புஸ்தகம்

செய்யுட் பாடம்

ஆத்திசூடி

---

1. அறஞ்செய விரும்பு.
2. ஆறுவது சினம்.
3. இயல்வது கரவேல்.
4. ஈவது விலக்கேல்.
5. உடையது விளம்பேல்.
6. ஊக்கமது கைவிடேல்.
7. எண்ணெழுத்து இகழேல்.
8. ஏற்பது இகழ்ச்சி.
9. ஐயம் இட்டுண்.
10. ஒப்புரவு ஒழுகு.
11. ஓதுவது ஒழியேல்.
12. ஒளவியம் பேசேல்.
13. அஃகஞ் சுருக்கேல்.
14. கண்டொன்று சொல்லேல்.
15. ஙப்போல் வளை.
16. சனி நீராடு.
17. ஞயம்பட வுரை. [ஞயம்—நயம்]
18. இடம்பட வீடெடேல்.
19. இணக்கமறிந்து இணங்கு.
20. தந்தை தாய்ப்பேண்.
21. நன்றி மறவேல்.
22. பருவத்தே பயிர்செய்.
23. மண்பறித்து உண்ணேல்.

24. இயங்கித் திரியேல்.
25. அரவ மாட்டேல்.
26. இலவம்பஞ்சில் துயில்.
27. வஞ்சகம் பேசேல்.
28. அழகலாதன செயேல்.
29. இளமையிற் கல்.
30. அறனை மறவேல்.
31. அனந்தல் ஆடேல்.
32. கடிவது மற.
33. காப்பது விரதம்.
34. கிழமைப் படவாழ்.
35. கீழ்மை அகற்று.
36. குணமது கைவிடேல்.
37. கூடிப் பிரியேல்.
38. கெடுப்பது ஒழி.
39. கேள்வி முயல்.
40. கைவினை கரவேல்.

உலகநீதி

ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்.
ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்.
மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டாம்.
வஞ்சனைகள் செய்வாரோடு இணங்க வேண்டாம்.
போகாத இடந்தனிலே போக வேண்டாம்.
போகவிட்டுப் புறம்சொல்லித் திரியவேண்டாம்.

நெஞ்சாரப் பொய்தன்னைத் சொல்ல வேண்டாம்.
நிலையில்லாக் காரியத்தை நிறுத்த வேண்டாம்.
நஞ்சுடனே ஒருநாளும் பழக வேண்டாம்.
நல்லிணக்கம் இல்லாரோடு இணங்க வேண்டாம்;
அஞ்சாமல் தனிவழியே போக வேண்டாம்.
அடுத்தவரை ஒருநாளுங் கெடுக்க வேண்டாம்.
மனம்போன போக்கெல்லாம் போக வேண்டாம்.
மாற்றானை உறவென்று நம்ப வேண்டாம்.
தனம்தேடி உண்ணாமற் புதைக்க வேண்டாம்.
தருமத்தை ஒருநாளும் மறக்க வேண்டாம்.
சினம்தேடி அல்லலையும் தேட வேண்டாம்.
சினத்திருந்தார் வாசல்வழிச் சேர வேண்டாம்.
குற்றமொன்றும் பாராட்டித் திரிய வேண்டாம்.
கொலைகளவு செய்வாரோடு இணங்க வேண்டாம்.
கொற்றவனோடு எதிர்மாறு பேசவேண்டாம்.
மூத்தோர்சொல் வார்த்தைதனை மறக்கவேண்டாம்.
சேராத இடந்தனிலே சேரவேண்டாம்.
செய்த நன்றி ஒருநாளும் மறக்கவேண்டாம்.
தெய்வத்தை ஒருநாளும் மறக்கவேண்டாம்.

வெற்றிவேற்கை

1. எழுத்தறி வித்தவன் இறைவனாகும்.
2. கல்விக்கழகு கசடற மொழிதல்.
3. செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல்.
4. வேதியர்க் கழகு வேதமும் வொழுக்கமும்.
5. மன்னவர்க் கழகு செங்கோன் முறைமை.
6. உழவர்க் கழகிங் குழுதூண் விரும்பல்.

7. மந்திரிக் கழகு வரும்பொரு ளுரைத்தல்.
8. தந்திரிக் கழகு தறுகண் ணண்மை.
9. உண்டிக் கழகு விருந்தோ டுண்டல்.
10. பெண்டிர்க் கழகு எதிர் பேசா திருத்தல்.
11. குலமகட் கழகுதன் கொழுநனைப் பேணுதல்.
12. அறிவோர்க் கழகு கற்றுணர்ந் தடங்கல்.
13. வறியோர்க் கழகு வறுமையிற் செம்மை.
14. தேம்படு பனையிற் றிரள்பழத் தொருவிதை
வான்பெற வோங்கி வளம்பெற வளரினும்
ஒருவற் கிருக்க நிழலா காதே.
15. தெள்ளிய ஆலின் சிறுபழத் தொருவிதை
தெண்ணீர் கயத்துட் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே யாயினும் அண்ணல் யானை
அணிதேர் புரவி யாட்பெரும் படையொடு
மன்னர்க் கிருக்க நிழலா கும்மே.
16. பெரியோ ரெல்லாம் பெரியரு மல்லர்.
17. சிறியோ ரெல்லாம் சிறியரு மல்லர்.
18. பெற்றோ ரெல்லாம் பிள்ளைக ளல்லர்.
19. உற்றோ ரெல்லாம் உறவின ரல்லர்.
20. கொண்டோ ரெல்லாம் பெண்டிரு மல்லர்.
21. அடினும் ஆவின்பால் தன்சுவை குன்றாது.
22. சுடினும் செம்பொன் தன்னொளி கெடாது.
23. அரைக்கினும் சந்தனம் தன்மண மாறாது.
24. புகைக்கினும் காரகில் பொல்லாங்கு கமழாது.
25. கலக்கினும் தண்கடல் சேறா காதே.
26. கற்கை நன்றே கற்கை நன்றே.
27. பிச்சை புகினும் கற்கை நன்றே.
28. அறிவுடை யொருவனை யரசனும் விரும்பும்.
29. யானைக்கில்லை தானமும் தருமமும்.
30. பூனைக்கில்லை தவமும் தயையும்.

31. ஞானிக்கில்லை இன்பமும் துன்பமும்.
32. சிதலைக்கில்லை செல்வமும் செருக்கும்.
33. முதலைக்கில்லை நீத்து நிலையும்.
34. அச்சமும் நாணமும் அறிவிலோர்க் கில்லை.
35. நாளுங் கிழமையும் நலிந்தோர்க் கில்லை.
36. கேளும் கிளையும் கெட்டோர்க் கில்லை.
37. உடைமையும் வறுமையும் ஒருவழி நில்லா.
38. இல்லோ ரிரப்பது மியல்பே யியல்பே.
39. இரந்தோர்க் கீவது முடையோர் கடனே
40. துணையோ டல்லது நெடுவழி போகேல்
41. வழியே யேகுக வழியே மீளுக.
42. வாழிய நலனே வாழிய நலனே.

TB 031;3(1) N-9

85046

PRINTED AT THE "SATYA NESAN" PRESS, MADRAS.—1929.

RTR/3

பரதநாட்டின் இரத்தினங்கள்

எளிய நடையில் எழுதப்பெற்றுப் பெரிய எழுத்துக்களில் அச்சிடப்பட்டிருக்கின்றன. எலிமெண்டரி பாடசாலைகளில் கீழ் வகுப்புகளுக்கு உபகரண புத்தகங்களாக உபயோகப்படக்கூடியவை.

		அ.	பை.
1.	சீதை, சாவித்திரி, உமை ...	2	0
2.	அபிமன்யு	2	0
3.	பீமசேன மகாவீரன்	3	0
4.	சந்திரமதி	2	0
5.	தமயந்தி	2	0

கதா வாசக புத்தகங்கள்

காலஞ்சென்ற பச்சையப்பன் கலாசாலைத் தமிழ்ப் புலவர்

தி. செல்வகேசவராய முதலியார், M.A., அவர்கள் இயற்றியவை.

புதிய பதிப்பு

பாலசிக்ஷை (முதல் வகுப்பிற்கு) ...	2	0
முதல் கதா வாசக புத்தகம் (இரண்டாம் வகுப்பிற்கு) ...	2	6
இரண்டாவது கதா வாசக புத்தகம் (மூன்றாம் வகுப்பிற்கு)	4	0
மூன்றாவது கதா வாசக புத்தகம் (நான்காம் வகுப்பிற்கு).	4	0
நான்காவது கதா வாசக புத்தகம் (ஐந்தாம் வகுப்பிற்கு).	5	0

பாலநீதிச் செய்யுள் திரட்டு

முதற்படி (ஜூனியர்)

பகுதி 1. உலகநீதி, ஆத்திசூடி. (2-வது வகுப்புக்கு ஏற்றது) ...	1	6
பகுதி 2. கொன்றைவேந்தன், வெற்றிவேற்கை. (3-வது வகுப்புக்கு ஏற்றது)	2	0
பகுதி 3. வாக்குண்டாம், நல்வழி. (4-வது வகுப்புக்கு ஏற்றது)	2	0

Macmillan's First Story Reader, Tamil $2\frac{1}{2}$ As.